மூன்று மனிதர்கள் ஒரேவிதமான குற்றம் செய்திருந்தனர். ஆனால் அவர்கள் எந்த நாட்டில் குற்றம் செய்திருந்தார்களோ அந்த நாட்டரசன் அவர்களுக்கு மூன்றுவித தண்டனை அளித்தான். ஒருவன் குற்றத்தை விளக்கிச் சொல்லி அவனை விட்டுவிட்டான். இரண்டாமவனை அவன் தவறு அதிகமெனக் காட்டி பலே என்றான். மூன்றாமவனைக் கழுதையின்மேலேற்றி ஊர் வலம் வரும்படி ஆணையிட்டான்.

மந்திரி அரசனைப் பார்த்து மூவரும் ஒரேவித குற்றத்தைச் செய்திருக்கத் தண்டனை மூன்றுவிதமாவானேன் என்று கேட்டான். அரசன் 'இதன் உண்மையை உனக்குக் காட்டுகிறேன். அவர்கள் மூவரும் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை வரவழை' என்றான்.

மந்திரி விசாரித்ததில் அரசன் எவனது குற்றத்தை விளக்கிவிட்டானோ அவன் அவமானத்தால் தற்கொலை செய்துகொண்டதாகவும், எவன் தவறை மெச்சினானோ அவன் அவ்வூரைவிட்டு வேறு ஊருக்குப் போய்விட்டதாகவும், கழுதையின்பேரில் ஊர்வலம் வந்தவன் கள் குடித்துச் சூதாடுவதாகவும் தெரியவந்தது.

அப்போது அரசன் மந்திரியிடம் 'யோக்கியனுக்கும் அற்பனுக்கும் சிட்சையில் வேறுபாடிருக்கவேண்டும். யோக்கியனுக்கு வார்த்தையே பெரிது, அற்பனுக்குக் கழுதையின்மேல் ஏற்றினாலும் வெட்கம் இல்லை' என்று சொன்னான்.

# பாடம் 92

## சங்கேத லிபியில் எழுது

ஒரு நாள் பஞ்சாப்கேஸரி மஹாராஜா ரணஜித் ஸிங் உலாவப் புறப்பட்டு மைதானத்தை அடையவும் மெய்க்காப்பாளரில் சிலர் நின்றுவிட்டனர், சிலர் குதிரை விட்டிறங்கி உடன் நடக்கலாயினர். அப்போது ஒரு தரித்திர மொகலாயன் தன் வாளை வீசிக்கொண்டு அவ் விடத்தைக் கிட்டினான், அவனை யாரும் பார்க்கவில்லை. அவன் மகாராஜாவின்பேரில் வாளை வீசுமுன்னதாக ரணஜித்சிங் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டார். அப்போது இந்த ஸாஹஸியான மொகலாயன்மேல் எல்லாக் குதிரை வீரர்களும் விழலாயினர். மஹாராஜா ரணஜித்சிங் அவர்களை மிரட்டி, 'இவனை எவனும் அடிக்காதீர்கள். அவன் மஹாராஜாவின் முன்னால் நின்றிருக்கிறான் : என்று சொல்லிவிட்டு, அவனைப் பார்த்து 'உனக்கென்னவேண்டும். எதற்காக வந்தாய்?' எனக் கேட்டார். அவன் தன் தரித்திரத்தின் கொடுமை களை யெல்லாம் சொன்னான். மஹாராஜா அவன் வீரத்தையும் உண்மையையும் மிகவும் மெச்சி அவனுக் குக் கலியாணத்திற்கென ஐந்நூறு ரூபாய்களைக் கொடுத்து அவனை நல்லதொரு உத்தியோகத்திலும் அமர்த்திக்கொண்டார்.

# பாடம் 93

## சங்கேத லிபியில் எழுது

ஒரு நாள் கௌதமபுத்தனும் அவனது தம்பி முறையினனான தேவதத்தனும் உட்கார்ந்திருந்தார்கள். அச்சமயம் ஹம்ஸங்களின் கூட்டமொன்று அழகாகத் தம் முன் பேசிக்கொண்டு ஹிமாலயத்தின் பக்கமாகப் பறந்துகொண்டிருந்தது. தேவதத்தன் எல்லாவற்றுக்கும் முதலில் சென்றுகொண்டிருந்த அன்னத்தின்மேல் ஒரு அம்பை எய்தான். அது அடிபட்டுத் தரையில் சுழன்று விழுந்தது, புத்தனால் அதன் துன்பத்தைப் பார்க்க முடியவில்லை. மேலும் அவன் கண்களில் கண்ணீர் நிறைந்தது. அவன் பாதி உயிராயிருந்த அவ்வன்னத்தை எடுத்துக்கொண்டான். மெல்ல மெல்ல அம்பை இழுத்தெடுத்து காயத்தில் மருந்து தடவி அதனைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டான். இதற்குள் தேவதத்தன் "நான் அன்னத்தை அடித்து வீழ்த்தியவன் அதை என்னிடம் கொடுத்துவிடு" என்றான். புத்தன் "நீ இந்த சிறு உயிரைக் கொல்லப் பார்த்து நீ பெரிய தவறு செய்திருக்கிறாய். உனக்குக் கொஞ்சமும் இரக்கமென்பதே கிடையாது. நான் இந்த அன்னத்தை எப்போதும் உன்னிடம் கொடுக்கமாட்டேன்" என்றான். இருவருக்கும் பெரிய விவாதம் ஏற்பட்டது. அவர்கள் சண்டையைத் தீர்த்துக்கொள்ளப் பெரியோர்களிடம் சென்றனர். அவர்களில் ஒருவர், 'கொன்றவனைக் காட்டிலும் பிழைப்பித்தவனுக்கு அன்னத்தின்பேரில் அதிகாரம் அதிகம்" என்றார். இதைச் சபையினர் ஆமோதித்தனர். அவ்வன்னம் புத்தனிடமே இருந்தது. நன்றாக சொஸ்தமடைந்ததும் புத்தன் அதனைப் பறந்து போம்படி விட்டு விட்டான்.

# பாடம் 94

## சங்கேத லிபியில் எழுது

பார்ஸி தேசத்தில் ஒரு அரசனிருந்தான் மிக நியாயவானுகை இருந்தமையால் மிகவும் புகழ் பெற்றவனுனன். ஒரு ஸமயம் அவ்வரசன் ஒரு காட்டில் வேட்டையாடப்போய் வெகுதூரம் சென்றுவிட்டார். அங்கே அவன் சமையற்காரர்களைப் பார்த்து சீக்கிரம் சமையல் செய்யும்படி ஆக்ஞாபித்தான். வேலையாட்கள் ராஜதானியிலிருந்து உப்புக் கொண்டுவர மறந்து போயினர். அதனுல் முக்கிய வேலைக்காரன் ஒருவனைக் கூப்பிட்டு ஒரு ஊரைக்காட்டி 'சீக்கிரமாக ஓடிப்போய் இந்த ஊரிலிருந்து கொஞ்சம் உப்பு வாங்கிவா' என்று உத்தரவிட்டான். அரசன் பக்கத்திலிருந்தவன் இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தான். எவன் உப்பு வாங்கிவரச் சென்ருனே அவனை அரசன் தன்னிடம் அழைத்து நீ விலை கொடுக்காமல் எவரிடமிருந்தாவது உப்பை வாங்கிவந்தால் எனக்கு அது அஸந்துஷ்டியை உண்டுசெய்யும்' என்று சொன்னுன். பிரதானி 'மகாராஜாவுக்காகக் கொஞ்சம் உப்பு வாங்கினுல் அதற்கு என்ன விலை கொடுப்பது. என்ன, இதிலென்ன குற்றமிருக்கிறது? எனக் கேட்டான். அரசன் அவனைக் கிட்ட அழைத்து, "நான் அரசன். நான் விலை கொடுக்காமல் கொஞ்சமேனும் உப்பை வாங்கிக் கொண்டேனுகில் இதை த்ருஷ்டாந்தமாக்கி என்னைச் சேர்ந்தவர்கள் விலையே தராமல் அதிக விலையுள்ள வஸ்துக்களை வாங்கிக்கொள்ள ஆரம்பித்துவிடுவார்கள்" என்று சொன்னுன். இதைக் கேட்டு ப்ரதானி வெட்கம் அடைந்தான். விலை கொடுத்து உப்பு வாங்கிவர ஆள் அனுப்பினுன்.

# பாடம் 95

## சங்கேத லிபியில் எழுது

நாஸிருத்தீன் எப்போதாவது எவருடைய துக்கத்தையாவது பார்த்தால் அவனுடைய மனம் மிகக் கரையும். ஹிந்துஸ்தானத்தின் | பாதுஷா ஆனபின்பும் சிறு சிறு குடிசைகளில் வசிக்கும் ஏழைகளைப்பற்றி மிகவும் யோசனை | செய்வார். இந்தக் காரணத்தால் எல்லாப் பிரஜைகளும் மனமாற அவரை வாழ்த்தினதோடு அவருக்காக உயிரை | விடவும் தயாராக இருந்தார்கள். அவருக்குத் தமது அரசாங்க காரியங்களும் அதிகக் கவலையை அளித்தது |. அவர் இவ்விதம் அதுபற்றி நினைத்தார். ‘இது மிகக் கடினமான வேலை’. அவருக்கு | ஒரு மனைவி உண்டு. அவள் தானுகவே வீட்டு வேலைகளையெல்லாம் செய்துவந்தாள். | சமையலையும் தானே செய்வாள். ஒரு நாள் சமையல் செய்யும்பொழுது கையைச் சுட்டுக் | கொண்டாள். அவள் நாஸிருத்தீனுடன் மிகவும் பயந்துகொண்டே மெள்ள இந்த வார்த்தைகளை சொன்னுள். | ‘சமையல் செய்வதற்காக ஒரு பெண் இருந்தால் தேவலை’ என்ருள். நாஸிருத்தீன் ‘நீ பேகமாகி | விட்டதாக நினைத்துக் கொண்டுவிட்டாற்போலிருக்கிறது. நான் புத்தகம் எழுதி விற்கிறேன். அதனைக் | கொண்டே சாப்பிடுகிறேன். அதிலிருந்து வரும் வருப்படியில் கொஞ்சமும்

மீதி இல்லை. நாம் இருவரும் | நன்றாகச் சாப்பிடலாம், குடிக்கலாம். ஆனால் வேலைக்காரியை எங்கு வைத்துக் கொள்ள முடியும். | அரசாங்க கஜானாவில் என்னுடைய தாக ஒரு பைஸாக் கிடையாது. அது பிரஜைகளுக் குரியது. நான் | இன்று அதிலிருந்து ஒரு பைஸாவாகி லும் எடுத்துக்கொண்டேனாகில், நாளை கடவுளுக்கு என்ன பதிலளிப்பேன். | ஆகையால் நீ இந்தக் கஷ்டத் தைச் சகித்தால் கடவுள் இதற்குப் பலனளிப்பார்' என்று சொன்னான் | .

[குறிப்பு: இந்தப்பாட முதற்கொண்டு காலத்தை வைத்து எழுதி வந்து வேகத்தை அதி கரித்துக்கொள்ளப் பழகவேண்டும்.]

# பாடம் 96

## சங்கேத லிபியில் எழுது

ரகு,பதி ஸிம்ஹன் ராஜபுதனத்தின் ஒரு பெரிய ஸர்தார். அவன் அக்பர் பாதுஷாவிடம் எப்போதும் | யுத்தம் செய்துவந்தான். ஒருதடவை அக்பர் அவனைக் கைதியாகப் பிடிக்க ஒரு | மிகப் பெரிய படையை அனுப்பினான். ரகுபதி ஸிம்ஹன் அக்பரின் சேனை வரும் சமாசாரம் | கேட்டு வீட்டைவிட்டுக் கிளம்பி ஒரு காட்டையடைந்து அங்கே தங்கியிருந்தான். |

ரகுபதி ஸிம்ஹன் எப்போது வீட்டைவிட்டு ஓடினானோ அப்போது அவன் பிள்ளை மிக்க | வ்யாதிஸ்தனாக இருந்தான். ஒரு மாதம், இருபது நாட்களில் இறந்துவிடுவானோ என்ற பயமிருந்தது | ஆனால் உயிர், மானங்களைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு ரகுபதி ஸிம்ஹன் மகனைவிட்டுக் குறுக்காகக் | காட்டுக்குப் போய்விட்டான். அவன் போன உடன் அக்பரின் சேனைச் சிப்பாய்கள் அவன் | வீட்டைச் சூழ்ந்து கொண்டனர். பயத்துடன் இருந்தனர். அவன் எப்போதேனும் வீட்டுக்குத் திரும்பிவந்தால் | அவனைச் சிறை பிடிப்பதாக இருந்தனர்.

ரகுபதி ஸிம்ஹன் காட்டைவிட்டுக் காடலைந்து கொண்டே | இருக்கையில் அவனது சிநேகிதர்கள் அவனை யடைந்து 'உன் பையன் சாகுந்தருவாயிலிருக்கிறான். | நிலைமை ரொம்ப மோசமாயிருக்கிறது. அரை நாளில் இறந்துபோகலாம்' என்றார்கள்.

இந்த | சங்கதி கேட்ட ரகுபதி ஸிம்ஹனின் மனம் துக்கத்தால் நிறம்பியது, உயிரை அலட்சியம்செய்து | அவன் மகனைப் பார்க்கக் காட்டினின்றும் வெளிப்பட்டு வீட்டை நோக்கிவந்தான். எப்படியோ தன் | வீட்டு வாசலை அடைந்தான். அக்பரின் சிப்பாய்கள் அவனைப் பிடித்துக்கொண்டனர்.

ரகுபதி ஸிம்ஹன் | சிப்பாய்களிடம் 'நானோ இப்போது உங்கள் கைதியாகிவிட்டேன். ஆனால் உங்களை இவ்வளவு வேண்டிக் | கொள்கிறேன். வீட்டுக்குள் சென்று என் சாகுந்தருவாயிலுள்ள மகனைப் பார்த்து விட்டு வருகிறேன். | எப்போது வீட்டுக்குள்ளிருந்து திரும்பி வருகிறேனோ அப்போது என்னைச் சிறை பிடியுங்கள். நான் ராஜபுத்ரன். | என் வாயிலிருந்து எதனைச் சொல்லினும் அதனையே செய்வேன், உங்களை ஏமாற்றி எங்கும் ஓடிப்போக | மாட்டேன்' என்று சொன்னான்.

இதைக்கேட்ட படைவீரர்கள் ரகுபதி ஸிம்மனை உள்ளே | செல்ல அனுமதியளித்தனர். ரகுபதி ஸிம்மன் உள்ளே சென்று பையனைக் கட்டிக்கொண்டு கட்டிக்கொண்டு | மிகவும் அழுதான். கொஞ்சநேரங் கழித்துப் பின் வெளியே புறப்பட்டவனை மகன் 'நான் | இன்னம் இரண்டு அல்லது நான்கு நிமிஷங்களில் இறக்கப்போகிறேன். தனியே இப்படி என்னை | விட்டு எங்கே போகிறீர்கள்' எனக்கேட்டான்.

ரகுபதி ஸிம்ஹன் மகனிடம் தன் வரலாற்றை | யெல்லாம் சொல்லி, 'நான் படைவீரர்களிடம் எந்த உறுதி கொடுத்துவந்தேனோ அதனை | மீறமாட்டேன்'

என்றான். மகனும் ராஜபுத்திரனாதலால் அவ்வித மாகவே செய்யும்படி சொல்லிவிட்டான் |

ரகுபதி ஸிர்ஹான் மகனிடம் விடை பெற்றுக் கொண்டு படைவீரர்களின் முன்வந்து நின்றான். மேலும் | சொன்னதாவது : 'என்னைச் சிறை பிடியுங் கள்' என்பதாம். சிப்பாய்களின் ஸர்தார் மனத்தில் ரகுபதி ஸிம்ஹனின் வீரமும், | உண்மையும் ஒரு மாறு பாட்டை உண்டாக்கின. அவன் தன் வீரர்களைப் பார்த்து 'என் | மனத்தில் இப்படி ஒரு வீரமும் உண்மையுமுள்ள ஒருவனைச் சிறை பிடிப்பது சரியல்ல வெனப் | படுகிறது' என்றான், அல்வளவில் பாது ஷாவே அங்கு வந்து நடந்ததையெல்லாம் கேட்டு ரகு பதி ஸிம்ஹனை | விட்டுவிட்டதன்றி அவன் வீட்டுக் காவலையும் எடுத்துவிட உத்தரவிட்டார்.

# பாடம் 97

## சங்கேத லிபியில் எழுது

உலகில் பல்வேறு பிரதேசங்களிலும் ஹிந்துஸ்தானத்தில் சிற்சில இடங்களிலும் முக்கியமாக க்வாலியரிலும் ஒரு | விதமான கருப்புக் கல் அகப்படுகிறது. அக்கல்லில் தன்னிடம் இரும்பை இழுத்துக்கொள்ளும் சக்தி | இருக்கிறது. எந்த இரும்பை அது தன்னிடம் இழுத்துக்கொள்கிறதோ அது அதனோடு ஒட்டிக் | கொள்ளும். அதனை இழுத்தால் அது நன்றாக ஒட்டிக்கொண்டிருப்பது தெரியும். இவ்விதக் | கறுப்புக்கல்லை அயக்காந்தம் அல்லது காந்தக்கல் என்று சொல்வர்.

இந்நாளில் அனேகர் சிறுவர்கள் | ஒரு ஊசியை ஒரு தட்டில் வைத்துக் கையில் ஒரு சிறு காந்தக்கல்லை மறைத்து வைத்துக்கொண்டு | தட்டிலுள்ளதை அங்குமிங்கும் ஓட்டத் தட்டின்கீழ் கையை ஆட்டுகின்றனர். ஊசியும் அங்குமிங்கும் ஓடுகிறது | வாஸ்தவமாக இது காந்தக் கல்லால் ஏற்படுகிறது. இன்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்குமுன் சீனா | தேசத்தார் காந்தக் கல்லைக் கொண்டு வருவர். அக்கற்கள் திசை காட்டும் கருவி செய்ய | உபயோகப்பட்டன. இன்றும் கூடக் கடலில் பிரயாணம் செய்வோர் திசையறிய இதனை உபயோகிக்கின்றனர். காந்தக்கல் | இரும்பைத் தன்னிடம் ஆகர்ஷிக்கிறது. இரண்டும் சேர்ந்து பலமுள்ளதாக ஆகி அவை இன்னொன்றையும் இழுத்துக் | கொள்ளும்.

உலகினர் எப்போதிலிருந்து இதனைத் தெரிந்து கொண்டிருந்தார்கள், எப்போதிலிருந்து இதனை உப யோகித்துக் கொண்டிருந்தார்க ளென்பதைப் | பற்றி அறிந்தோர் இதுவரை நிச்சயமாகத் தெரிந்துகொள்ள வில்லை. ஆனால் ஒன்று சொல்வர். ப்ராசீனகாலத்தில் | குஜராத் தேசத்தில் ஒரு கோயில் இருந்தது. அதில் ஒரு விக்ரஹம் கீழே தொங்கிக் | கொண்டிருந்ததாம். ஒருசமயம் கோயில் சேதமடைந்தது. அதனால் அதை இடிக்கத் தீர்மானித்தனர். | நான்கு மூலைகளில் ஒன்றை இடித்தபோது விக்ரஹமும் கீழே விழுந்தது. அதி லிருந்து தெரிய | வந்ததாவது காந்தக் கல்லினாலேயே அம்மூர்த்தி அவ்விதம் தொங்கிக்கொண்டிருந்தது என்ப தாம். இதனைப்பற்றி | சம்ஸ்க்ருதத்தில் பழைய க்ரந் தங்களில் கூறப்பட்டுள்ளது. இதனால் இந்த நிச்சயம் ஏற்படுகிறது. அக்காலத்தில் | பரதவர்ஷ மக்கள் காந் தக்கல்லின் உபயோகத்தை வெகுவாக அறிந்து உப யோகித்துவந்தனர். | அப்போது பாரத வர்ஷத்தில் அயக் காந்தத்தைப்பற்றிய அறிவு விசேஷமாக இருந் தது. அப்போது | முதல் இப்போதுவரை அந்த உன்னத அறிவு அவ்விதமே வளர்ந்து வந்திருப்பின் | அது இப்போது மிக உன்னத தசையிலிருந்திருக்கும்.

# பாடம் 98

## சங்கேத லிபியில் எழுது

ஜயபூர் மஹாராஜா ராம்ஸிங்க் மிக்க தயையுள்ளவனும் நல்ல குணவானுமாக இருந்தான். ஒருநாள் அவன் | காட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்தான். வேட்டையில் பொழுதுபோனது தெரியாமல் இருட்டிவிட்டது. அரண்மனை | வழியும் மறந்துபோயிற்று.

மஹாராஜா இந்நிலையில் நின்றிருந்தவன், என்ன செய்வது? இரவை எப்படிக் | கழிப்பது? என்று நினைத்தான். அவ்வளவில் ஒரு புல் வேய்ந்த குடிசையில் விளக்கேற்றப்பட்டிருந்தது | தெரிந்தது. மஹாராஜா அந்தக் குடிசையின் பக்கமாக மெள்ள மெள்ளச் சென்று, சேர்ந்து அதற்குள்ளும் | புகுந்தான்.

குடிசைக்குள் ஒரு 70 வயதுக்கிழவி இருந்தாள். மஹாராஜா அவளைப் பார்த்து, | 'நான் இராணுவக்காரன். பாதையை மறந்துவிட்டேன், நீ அனுமதித்தால் இரவை உன் | குடிசையிலேயே கழிக்கிறேன். காலையில் எழுந்து போய்விடுகிறேன்' என்றான். கிழவி 'என்னிடம் உலர்ந்த கொட்டை தயாராக | இருக்கிறது. அதைச் சாப்பிடு. இங்கேயே இரு' என்றாள்.

மஹாராஜா கிழவியோடு குடிசையில் படுத்து | இருந்தார். காலையில் அரண்மனையை நோக்கிச் செல்லு முன் மஹாராஜா கிழவியைப் பார்த்து 'இந்தக் | காட்டில் உன் பிழைப்பு எவ்விதம் நடக்கிறது? மேலும் உன்னைச் சேர்ந்தோரெவரேனும் இருக்கிறார்களா | இல்லையா?' என்று கேட்டார். கிழவி, 'நான் இந்தக் காட்டில் ஏழையான முஸாபர்களுக்குத் தண்ணீ | ரளித்து வயிறு வளர்க்கிறேன். எனக்கு ஒரு மகன் உண்டு. அவன் மஹாராஜா ராம்சிங்கின் | படையில் வேலையிலிருக்கிறான். பன்னிரண்டு வருஷங்களாக அவன் என்னிடம் வருவதில்லை. அவன் இறந்தே | விட்டானோ, பிழைத்திருக்கிறானோ என்றுகூடத் தெரியாது' என்று இவ்விதம் சொல்லிவிட்டு மகனை நினைத்து | அழத் தொடங்கிவிட்டாள்.

கிழவியின் இந்த கஷ்டத்தைப் பார்த்து மஹாராஜாவின் மனம் இளகிவிட்டது |. போகும்பொழுது அவளைப் பார்த்து 'நான் உன் மகனை உன்னோடு சேர்த்து வைக்கிறேன்' என்று | சொல்லிப் போனான். அவன் சொல்லியதொன்றும் அவளுக்கு விளங்காமல் அவள் அழுதுகொண்டே | இருந்தாள்.

அரசன் அரண்மனையைச் சேர்ந்தஉடன் அவன் கிழவியைக் காட்டிலிருந்து வரவழைத்தான். கிழவி | மஹாராஜாவினெதிரில் நின்றதும் நடுங்க ஆரம்பித்தாள். ஆனால் மஹாராஜாவின் முகத்தைப் பார்த்ததும் |

'அம்மனிதன் சிப்பாயென்று சொல்லிக்கொண்டு தன் குடிசையில் தூங்கினானே' என நினைத்து தன் குடிசையிலிருந்தது அரசனே எனத் தெளிந்தாள்.

அரசன் புன்சிரிப்புடன் கிழவியைப் பார்த்து, 'உன்னுடன் சுகமாக இருந்ததற்கு என்னால் உனக்குத் தரப்படும் பரிசானது: உன் பிள்ளை உன் முன்னால் நிற்கிறான் பார். அவனை உன்கூட அழைத்துப் போகலாம். நான் அவனுக்கு வீட்டிலுட்கார்ந்திருந்தும் உபகாரச்சம்பளம் தருகிறேன்' என்றான்.

கிழவி இதைக் கேட்டு வெகு சந்தோஷமடைந்தாள். தன் மகனைத் தன்னோடு அழைத்துக்கொண்டு மலர்ந்த முகத்துடன் வீடு சென்றாள்

# பாடம் 99

## சங்கேத லிபியில் எழுது

ஐந்நூறு வருடங்களுக்குமுன் நடந்த சம்பவமிது, என்னவெனில் இங்கிலாந்து அரசர் ஸ்காட்லண்டின் | மேல் ஆட்சி செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் அவ்விடம் படையெடுத்துச் சென்றான். | அச்சமயத்தில் ராபர்ட் ப்ரூஸ் என்னும் பெயருடைய மனிதனொருவன் ஸ்காச், ஜனங்களின் | தலைவனிருந்தான். இங்கலாந்தரசனின் ஸைன்யம் வெகு பலமாக இருந்தமையால் அவன் தன் தாய் | நாட்டை அவர்களிடமிருந்து காப்பாற்ற முயன்று முதலில் பராஜயமடைந்தான். அவன் தன் | தேசத்தைச் சுவாதீனப்படுத்திக்கொள்ள மிகுந்த ச்ரமப்பட்டான். அவன் எப்போதும் வயிறு | நிறையச் சாப்பிடவில்லை. எப்போதும் அரைவயிறு சாப்பிட்டுக் கொண்டு காலங்கழித்தான். | ஆனால் எப்போதும் தன் ஆலோசனையை விடவே இல்லை. ஒரு தடவை அவன் பல | மாதங்கள் காலம் ஐர்லண்டின் வடக்கோரத்திலிருந்த ஒரு தீவில் ஒளித்துக்கொண்டு காலம் | போக்கினான்.

அநேகமாய்ப் பார்த்தால் நல்ல கார்யத்துக்கு விக்னங்கள் அனேகம் ஏற்படுகின்றன. ராபர்ட் ப்ரூஸுக்கும் | பலவிதத் துன்பங்கள் ஏற்பட்டன. விடாமல் துயரமும் துன்பமுமே ஏற்பட்டால் எப்பேர்ப்பட்ட ஸாஹஸியும் | குன்றிப்போவான். எவன் குன்றிப் போய் பின்னுக்குப் போகிறானோ அவனுடைய முன் முயற்சி | களெல்லாம் மண்ணாகிப் போய்விடும். எந்தப் புருஷன் விபத்துக்கள் ஏற்பட்டாலும் அவற்றை எதிர் | த்தடிக்கின்றானோ அவன் உயர்ந்துகொண்டே

போவான். மேலும் விபத்துக்களும் அவனுக்குப
டயந்து அவனை | விட்டுப்போம் இப்படிப்பட்ட புரு
ஷன் தன் முயற்சி பூரக் கைகூடப் | பெற்றபின் தான்
களைப்பாற எண்ணுவான்.

எப்பொழுது ஆபத்துக்கள் ப்ரூஸை அட்டைகள்
போல் | பற்றிப்பிடிக்க ஆரம்பித்தனவோ அப்போது
அவன் மன உறுதி தளரலாயிற்று. சத்ருக்களிடமிருந்து
உயிர்தப்ப அவன் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்
தான் | அச்சமயம் அவன் தன் நாட்டை | ஸ்வாதீனப்
படுத்திக்கொள்ளச் செய்துவந்த சண்டையினின்று பின்
வாங்கிவிடலாமா என்ற | யோசனையைச் செய்தான்.
ஒருநாள் பாயின்மேல் படுத்த வண்ணம் இவ்விஷயத
தைப்பற்றி | ஆலோசித்துக்கொண்டிருக்கையில் ஒரு
சிலந்தியொன்று கவனத்தைக் கவர்ந்தது. அது வலை |
பின்னுவதற்காக வட்டத்தின் ஒரு நூலிலிருந்து மற்
றொன்றுக்குத் தாவிக்கொண்டிருந்தது கீழே விழுந்து |
விட்டது. நூலிழையின்பேரில் ஏற ஆரம்பித்தது மறு
படி விழுந்தது. இரண்டாம்முறை | பிரயத்தனப்பட்டுப்
பயனடையவில்லை. மூன்றாம் முறையும் ஏறிப் பின்
கீழே விழுந்தது. | ஆனால் அந்தச் சிலந்தியின் மனம் கீழ்
விழுவதில் மேலேறுவதிலில்லை. அது வலை | பின்னு
வதிலேயே மனத்தைச் செலுத்தியிருந்தது. நான்காம்
முறை ஏறியது. மறுபடி பூமியே சினேகமாயது. |
விழுந்ததும் திரும்ப ஏறவாரம்பித்தது. ஐந்தாம் முறை
யும் ஏறவே, பாவம் மறுபடிக் கீழே | விழுந்தது. அது
மிக ஆச்சரியமாக இருந்தது. அதற்கு உயிரின்மேல்
லக்ஷியமில்லை. அறியாத | சிலந்தி தன் உயிரை விளை
யாட்டாக மதித்திவிட்டது. ஒரேயடியாக ஐந்துதடவை
விழுந்தி | ருந்துங்கூட அதை எண்ணாமல் காரியத்தில்
கண்ணாயிருந்த அது தன் பலத்தை | யெல்லாம் உபயோ
கித்து ஆறுந் தடவையாக ஏறத் தொடங்கிற்று. அது
ஏறிற்று, தாவப்போகிறது, | தாவியது. ஓ! விழுந்து
விட்டது. துரதிர்ஷ்டத்தால் மறுபடியும் விழுந்தது!

'நிர்ப்பாக்கிய ச் சிலந்தியே! நீயும் என்னைப்போல ஆகி விட்டாயே நான் இங்க்லீஷ்காரரிடம் ஆறு தடவை தோற்றுள்ளேன். ஆனால் அது ஏழாந்தடவை ஏற எண்ணாது' என்று நினைத்துக் கொண்டிருக்கையி லேயே அது ஏறத் தயாராகியது. நான் ச்ருஷ்டியில் மிக உயர்ந்த ப்ராணி ஆறு தடவை விபலமானதும் தோல்வியுற்றேன். இது மிக அற்ப ஜந்து. இது தோல்வியுற்றதாக எண்ணவில்லையே, முயற்சி கொண்டே இருக்கின்றதே. என் வாழ்க்கையிலும் பலனடைவதிருக்கின்றதா பார்ப்போம். சிலந்தி ஏழா வது தடவையில் பலனடைந்ததாகில் நானும் முயற்ச் சித்து இந்தமுறை உண்மையாகப் பலனடைவேன்' என்று சொல்லிக்கொண்டான்.

ராபர்ட் ப்ரூஸ் உற்சாகத்தோடும் தன்னை முயற்சியில் தூண்டி உபகரித்த சிலந்தியைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான் இந்தத் தடவை அதனைப் பார்க்கப் பார்க்க அவன் மனத்தில் ஆச்சரியமும் உற்சாகமும் ஆனந்தமும் பொங்கின. அவன் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அது தன் முயற்சியில் ஜயமடைந்தது. உடன் அவனும் யுத் தத்தை நடத்தியே தீருவதென்ற உறுதிபூண்டான். சிதறிப்போன தன் சமர்த்தைக்கூட்டி உறுதியுடன் போர் தொடங்கினான். இத்தடவை தன் முழுத் திறமையுடனும் போர் புரியவே ஜயமடையத் தொடங்கினான் கடைசியாக பானக்பர்ன் களத்தில் இங்க்லீஷ்காரரை முற்றிலும் முறியடித்தான். தன் உயிருக்கும் மேலான சொந்த நாட்டைச் சுதந்திரநாட் டாக்கி சுகமே இருத்தினான்.

# பாடம் 100

## சங்கேத லிபியில் எழுது

முஜப்பர்பூர் நகரத்தில் ஒரு நாள் பெரிய உற்சாகம் காணப்பட்டது. அங்கு ஒரு நவாப் | சாஹிப் ப்ரொபெஸர் ராமமூர்த்தியோடு ஒரு பந்தயம் கட்டியிருந்தார். நவாப் சாஹிபின் மோட்டாரை | ராமமூர்த்தி நிறுத்தி விட்டால் அவருக்கு 500 ரூபாய் வெகுமதி கிடைக்கும் இல்லை | யாகில் அவரிடமிருந்து 1000 ரூபாய் வசூல் செய்யப்படும். இது பந்தயம். ஆட்டத்தின் | பெரிய கூடாரத்தில் எள் விழ இடமில்லை. நவாப் ஸாஹிப் தமது மோட்டாருடன் உட்கார்ந்திருந்தார். குறிப்பிட்ட வேளைக்குச் சரியாக கூடாரத்துக்குள் ஒரு சிறு வாயில் வழியாக | பாண்டு வாத்தியம் வாசித்துக்கொண்டிருக்க ஒரு யௌவனப் பருவத்தினன் கம்பீரமாக நடந்துவந்தான். | அவன் உடை பளபளவென்று மின்னியது, உடம்போடு ஒட்டியிருந்தது, சுற்றிவந்து | தலை வணங்கிப் பார்க்கவந்தோரனைவருக்கும் நமஸ்காரம் செய்தான். நவாப் சாஹிபின் மோட்டாருக்குப் பின் | சென்று அங்கு ஒரு கயிறு கட்டி அதனைத் தன் இடுப்பில் கட்டிக் கொண்டான். | பிறகு அவன் நவாப் ஸாஹிபுக்கு அவருடைய மோட்டாரை ஓட்டச் சொன்னார். முதன் முதல் | மோட்டார் இரண்டு நான்கு அடிகள் நகர்ந்தது. ஜனங்கள் ராமமூர்த்தி தோற்றுவிட்டதாக | எண்ணினர். ஆனால் இந்த யுவா நகைத்தவண்ணம் பின்னே நடந்தான். இத்தடவை நவாப் | சாஹிப் மோட்டாரின் முழுப் பலத்தையும் விட்டு ஓட்டிப் பார்த்தார். மோட்டாரோ நின்ற நிலையிலேயே | நிலைத்துவிட்டது. மரத்

துண்டொன்றை உதைந்தவண்ணம் நின்றுகொண்ட ராமமூர்த்தி பின் சரிந்து | கயிறைப்பிடித்து மோட்டாரைப் பின்னே இழுத்தான். மோட்டாரின் முழு வேகமும் உபயோகிக்கப்பட்டு இயந்திரம் | வேலை செய்தது, மோடார் முன் செல்லப் பார்த்தது. ஆனால் ராமமூர்த்தி இடம்விட்டு | அசையவே இல்லை. தோற்று நவாப் ஸாஹிபின் முகம் வெளுத்தது. ராமமூர்த்திக்கு ஜெய | மேற்பட்டது. பார்த்திருந்தோர் கை தட்டலாயினர். பிறகு ராமமூர்த்தி தனது மோட்டார் | ஒன்றைக் கொண்டுவந்து இரண்டுக்கும் இரண்டு கயிறு கட்டித் தன் இடுப்போடு பிணைத்துக் | கொண்டு நடுவே நின்றான். இரு மோட்டார்கள் எதிரெதிரான திசைகளை நோக்கி நின்றன. | அவற்றை ஓட்ட ஆக்ஞாபித்தான். முதலில் அவை முன்செல்லப் பிரயத்தனம் செய்தன. ராம | மூர்த்தியோ இடப்விட்டுக் கொஞ்சமேனும் நகரவே இல்லை. பார்ப்பாரின் ஆனந்தம் உச்சத்தை | அடைந்தது. கைகளைப் பட பட படவெனத் தட்டிக் கூடாரத்தை நிரப்பினார்கள்.

இன்று | ஹிந்துஸ்தானத்தின் ஒவ்வொரு வீட்டிலும் ராமமூர்த்தியின் பெயர் ப்ரஸித்தமாகி இருக்கிறது. அவன் யானையைத் | தன் மார்பின்பேரில் ஏற்றிக்கொள்வான். 25 குதிரை சக்தியுள்ள இரண்டு | மோட்டார்களை நிறுத்திவிடுவான். மார்பின்மேல் பெரு பெரு பாராங்கல்லை வைத்துக் | கொண்டு அதன்மேல் கல்லைத் துண்டு துண்டாக உடைக்கச் செய்வார். அரை அங்குல | கனமுள்ள இருப்புச் சங்கிலியைப் பூவைப் போன்று முறிப்பான். ஐம்பதுபேர் ஏறிக்கொண்ட | வண்டியை உடலின்மேல் இழுக்கச் செய்வான். ஏறக்

குறைய 75 மைல் வேகத்தில் அவன் உடல்மேல் மோட்டார் ஓடும். இந்த உலகில் காணாத பலம் தைவிக சக்தியாகும். கேட்க ஆச்சரியமுண்டுசெய்யும். பார்த்தால் முகவாய்க்கட்டையில் விரல் வைக்குமாறு செய்யும். ஆனால் இந்த வார்த்தை அசாத்யமெனத் தோன்றினாலும் அஸம்பவமன்று. ப்ரயத்னம் செய்தால் ராமமூர்த்தியைப்போல் எல்லோரும் ஆகக்கூடும். ராமமூர்த்தி தானே சொல்வதாவது: பலனடையவில்லை என்பதே ராமமூர்த்திக்கு எப்போதுமே தெரியாது. ஒரு தடவை, இரு தடவை, மூன்று தடவை, ஐந்துமுறை, பத்துத்தடவை முயற்சி செய்துகொண்டே இருந்தால் பலனவசியம் ஏற்பட்டே தீரும். 'கார்யஸாதனம் ஆகவேண்டும் அல்லது உடலழியவேண்டும்' என்பதே என் ஸித்தாந்தமாகும்.

# பாடம் 101

## சங்கேத லிபியில் எழுது

ராமமூர்த்தியினிடம் எந்த லோகாதீதமான பலத்தை நாம் பார்க்கிறோமோ அது விடாத | சொந்த முயற்சியின் பயனேயன்றி ஈச்வரனளித்த கொடையன்று. குழந்தைப் பருவத்தில் | ராமமூர்த்தி மிக பலமில்லாதவனாயும் மெலியவனாகவும் இருந்தான். இரண்டு வயதில் அவனுக்கு உக்ரமான | காசநோய் உண்டாயிருந்தது. அவன் முகம் வெண்மையாகவும் நோயைங் காட்டிக்கொண்டும் காணப்பட்டது. | தன் துர்ப்பலத்தைப்பற்றி அவனுக்கு மிகுந்த துக்கமேற்பட்டது. பீமன், லக்ஷ்மணன், | ஹநுமான் முதலியோரின் கதைகளைக் கேட்டு அவன் எண்ணியதாவது, 'நானும் எப்பொழுதேனும் அவ்வித பலவானாவேன்' | என்பதாம். பள்ளியில் படிக்கும்பொழுதும் எழுதும்பொழுதும்கூட அவன் இதனையே எண்ணிக் | கொண்டிருந்தான்.

கேவலம் கற்பனையிலேயே இருந்தால் கார்யம் நடவாது. கர்ம வீரபுருஷன் | தன் கல்பனையைக் கார்ய ரூபத்தில் மாற்றுவான் மேலும் உலகில் ஜயசாலியாவான். சிறுவன் | ராமமூர்த்தியும் கஸரத் செய்யவாரம்பித்தான். தன் ஸ்கூலிலும் அவன் புட்பால் முதலியவைகளை | ஆடவாரம்பித்தான். சிலநாள் வரை மேனாட்டு முறைப்படி கஸரத் செய்தான் |, ஆனால் ஒரு பயனும் பெறவில்லை. தோற்றுப்பின் தேசீய முறைப்படி கஸரத் செய்ய | ஆரம்பித்தான். அகாடாவில் பைடக், தண்டால், குஸ்தி பிடித்தல் இவைகளைப் பயின்றான். அவன் சொல்வதாவது: |

ஆரம்பத்தில் கஸரத் செய்ததில் உடம்பில் வலி எடுத்தது. அநேகந்தடவை நான் பாதி கஸரத் செய்து விட்டு விடுவேன், அகாடாவில் போனால் கடினம் தெரியும். ஆயினும் நானோ பயன்பெறவேண்டுமென்ற ப்ரதிக்ஞை செய்துகொண்டிருந்தேன். சரீரத்தில் சக்தி பெறவில்லையானால் நான் இறந்துபோவதாக எண்ணினேன். கடைசியாக எனக்குப் பலனேற்படத் தொடங்கியது. கொஞ்சங் கொஞ்சமாக கஸரத்தை அதிகமாகச் செய்தேன். அப்போது அதிகாலையில் எழுந்திருந்து இரண்டு க்ரோசதூரம் ஓடுவேன் பின் அகாடா சென்று நன்றாக குஸ்தி பிடிப்பேன். சண்டைக்குப் பின் மறுபடி மூன்று க்ரோச தூரம் ஓடுவேன். பிறகு வீட்டுக்கு வருவேன். வந்த பின்னும் சினேகிதர்களோடு குஸ்தி செய்வேன். அந்தச் சமயம் என் அகாடாவில் நூற்றைம்பது வாலிபர்கள் இருந்தனர்! அவர்களோடு குஸ்தி செய்தபின்பும் களைப்பால் நின்றுவிடமாட்டேன். மறுபடியும் இவ்வளவு பலமும் வேண்டாமா, நிற்கலாமா என நினைப்பேன், கடைசிவரை உழைப்பேன், சகாக்கள் என்னை மேலே எடுத்துக் கச்சையையும் அவிழ்ப்பர். பிறகு பயிற்சியில் ஆயிரத்தைந்நூறுமுதல் மூவாயிரம்வரை தண்டாலும் ஐயாயிரம்முதல் பத்தாயிரம் வரையில் படைக்கும் செய்வேன். இது தான் எனது நாள்தோறும் செய்து வந்த கஸரத்தாம். இதன் பலனென்ன வெனில் பதினாறும் வயதில் தென்னை மரத்தை ஓங்கி உதைத்தால் இரண்டு மூன்று தேங்காய்கள் உதிருமவ்வளவு பலம் பெற்றேன்.

ராமமூர்த்தியின் சாப்பாடும் அதிகமாம். இப்போதைய மாணுக்கர்கள் | கொஞ்சம் அதிகமாகச் சாப்பிட்டார்களேயானுல் வயிற்று வலியும் அஜீர்ணமுமுண்டாய் முணகி அழுவார்கள். இதற்குக் | காரணமென்ன வெனில், இவர்களுக்கு சாப்பிட்டதை ஜீரணித்துக் கொண்டு இரத்த வ்ருத்தி செய்து பலமடையும் ' சக்தி இல்லாமையே ஆகும். ஆனுல் ராமமூர்த்தியினிடம் இந்த வார்த்தை இல்லை. தயிர் அவன் | ப்ரியமான ஆகாரம். பகல் பன்னிரண்டு மணிக்கு கஸரத்தின்முன் பாதம் பால் குடிப்பான் | இரண்டுமணிக்குப் பிறகு மூன்றுசேர் தயிர், காய்கறி சாதத்துடன் அரைச்சேர் | நெய்யும் கூட்டிச் சாப்பிடுவான். இரவில் கொஞ்சமாக அன்னம் தயிர் சாப்பிடுவான். தினம் இரண்டு | மூன்று சேர் பாதமாவது அவன் வயிற்றினுள் சென்றிருக்கும். சில சமயம் ஒரு அரைச் | சேர் பாலேட்டோடு வெள்ளி ரேக்கைக் கலந்து உண்பதுண்டு. பால் விருப்பமில்லை. மாம்ஸம், | மீன், சாராயம் முதலியவற்றை எப்போதும் தூரத்தில் இட்டான். உண்மையில் இவ்வித அபக்ஷ்ய வஸ்துக்களைத் | தள்ளியே வைத்திருந்தான்.

# பாடம் 102

## சங்கேத லிபியில் எழுது

பலத்தில் அஸாதாரணமாகிவிட்டான் தேகத்தின் பூரிப்புக்குழைவுகளேயும் அழகையும் பார்த்து அக மகிழ்ந்தான் | ஆனல் அப்பொழுது ராமமூர்த்தி தன் பலத்தின் பரீக்ஷையைச் செய்து காட்டத் துடிதுடிப் புடன் | ஆரம்பித்தான். அச்சமயத்தில் யுஜீன் ஸாண்டோவென்ற பெயருள்ள ப்ரஸித்த யூரோபியன் பைல்வான் தனது | டம்பெல்ஸ்கொண்டு கஸரத் செய் வதில் பெயர்பெற்றவன் இருந்தான். அவன் முறை இன்று | பாரத தேசத்திலும் பழக்கத்திலிருக்கிறது. உலகில் அவன் பலத்தைப் பறை சாற்றி வந்தான். மேலும் | உலகில் பெயர்பெற்ற பயில்வான்களேத் தோற்கடித்துவந்தவன் ஹிந்துஸ்தானத்தை யடைந் தான். சென்னேவந்த | போது ராமமூர்த்தி அவன் பலத்தை முறியடிக்கும் கவலே கொண்டான். அவன் சொல்வதாவது :—

ஸாண்டோவின் | பலப்பரீக்ஷை எப்படிச் செய்ய லாம். மேலும் நான் அவன் முன் நிற்கமாட்டுவேனே | இல்லேயோ என்பதை அறியப் பெரிய உற்சாகங்கொண் டேன். கடைசியில் நான் சாண்டோவின் வேலேக்காரர் களோடு | சினேகம் செய்துகொண்டேன். அவனது ஆட்கள் போதையில் மயங்கி இருக்கும் சமயம் நான் | கூடாரத்துள் நுழைந்தேன். ஸாண்டோவின் டம்பெல்

ஸைப் பரீக்ஷித்தேன். எனக்கு நிச்சயமாக ஏற்பட்ட
தீர்மானமாவது, சாண்டோ | தனது 'சாலக்' கைக்
கொண்டு கீர்த்தியை அபகரித்து வருகிறானென்பதாம்.
அவன் பலசாலியென்பது | உண்மையாயினும் அவன்
எவ்வளவு காட்டிக்கொண்டானோ அவ்வளவு பலசாலி
யல்ல. மறுநாள் | நான் அவனுக்குச் 'சாலெஞ்ச்'
விட்டேன். குஸ்தி பிடிக்குமாறு கூவினேன். அவனோ
நான் தன்னைக் | காட்டிலும் பலவானாக இருப்பதாக
அறிந்து இவ்வார்த்தைகளைச் சொல்லி அவன் மானத்
தைக் காப்பாற்றிக்கொண்டான் | "நான் கறுப்பு மனித
னோடு குஸ்தி செய்யமாட்டேன்." என் ஆசையோ
வென்றால் சாண்டோவோடு | குஸ்திசெய்து தோல்வி
யுறும்படி செய்தனாகில் என் பெயர் உயருமென்பது.
ஆனால் அவன் மறுத்தபடியால் என் மன ஆவல் எனக்
குள்ளேயே தங்கிவிட்டது. மற்றும் எதுவாயினும், |
சாண்டோவைப் பார்த்தபின் ராமமூர்த்திக்கு மனத்தில்
மறுபடி மறுபடி தன் பலத்தை | நன்றாகக் காட்ட
வேண்டுமென ஆசை எழுந்தது. முதலில் அவன் ஏதோ
ஸர்கஸில் சேர்ந்து | தன் சாமர்த்யத்தைக் காட்டிவந்
தான் ஆனால் காலஞ்சென்ற லோகமான்ய திலகரின்
உதவியும் | அவர் தந்த பெயரும் கொண்டு அவன் தன்ன
தான ஒரு தனி ஸர்கஸை ஆரம்பித்தான். | ஸாண்டோ
பாரமெடுப்பதில் பெரும் பெயர் பெற்றிருந்தான். அவன்
ஐம்பது மணு பாரத்தை | எடுப்பான். ராமமூர்த்தி
அவனைக்காட்டிலும் இருமடங்கு மும்மடங்கு அதிக
மான பாரமெடுத்தான். | தன் ஆட்டத்தில் ஏறக்குறைய
நூறு மணு எடையுள்ள யானையைத் தன் இதயத்
தின் | பேரில் ஏற்றிக்கொள்வான். இந்த விஷயம்
உலகப் பிரசித்தமானது.

ஹிந்துஸ்தானத்தில் தனது | பலத்தை நன்கு
ஸ்தாபித்தபின் ராமமூர்த்தி விதேசத்துக்கும் போனான்.
இங்க்லண்ட், ப்ரான்ஸ் முதலான | யூரோபிய தேசங்
களிலும் அவன் புகழ் வேரூன்றியது. எவ்விதமாயினும்
அவன் வீரத்தைப் பார்த்து அனேகம் | வேற்று நாட்
டார் நடுங்கினர். அவர்கள் ராமமூர்த்தியை அடிக்கவும்
முயற்சித்தனர். மலாகாத்தீவில் இவன் | இருதடவை
விஷமிடப்பட்டான். முதல் தடவை விஷத்தின் அறி
குறியே தெரியவில்லை. | அவனது உறுதியான குடல்
அதனை ஜெரித்துவிட்டது. ஆனால் இரண்டாந்தடவை
அதிக விஷ | மிடப்பட்டமையால் அவன் கொஞ்சநேரம்
இறந்ததுபோல் கிடந்தான். விஷத்தின் லக்ஷணம் |
தெரியவே ராமமூர்த்தி லங்கோடி கட்டி ஐயாயிரம் தண்
டால் எடுத்தான். வியர்வையோடு விஷமெல்லாம் |
வெளிப்படுத்தப்பட்டது. ஆயினும் பலநாள் படுக்கையி
லேயே கிடந்தான். ப்ரான்ஸிலும் யாரோ துஷ்டர்கள் |
மோச வலையுளகப்படுத்தி அவனையடிக்க எத்தனித்த
னர். ராமமூர்த்தி யானையை மேலேற்றிக் | கொள்ளும்
போது தன்மேல் ஒரு பலகையை வைத்துக்கொள்
வான். அதன்மேல் | யானை தன் காலைச் சரியாகவைக்
கும். அதன் பூரப்பாரமும் அவன் இதயத்தில் | அமுக்
கும். அதன்பேரில் துஷ்டர்கள் இவனது ஐரோப்பிய
மானேஜருக்கு லஞ்சங்கொடுத்து அந்தப் | பலகையை
நடுவே இருதுண்டாக்கிவிட்டார்கள். பின் அதனைச்
சரியாகச் சேர்த்தும் விட்டார்கள். |

# பாடம் 103

## சங்கேத லிபியில் எழுது

எப்போது ராமமூர்த்தியின் மார்பின்மேல் யானை ஏறியதோ அப்போது அது கடக் | கென்று முறிந்தது. யானையின் ஒரு பாதம் ராமமூர்த்தியின் மார்பின்மேல் மாறான | இடத்தில் ஊன்றப்பட்டது. மார்பெலும்பில் மூன்று முறிந்து அவன் மூர்ச்சையடைந்தான். | பிறகு | ப்ரான்ஸின் அனேக ப்ரபல டாக்டர்களின் க்ருபையால் குணமடைந்தான். ஆனால் ஆறு மாதம் | ஆஸ்பத்திரியில் இருக்கவேண்டியதாயிற்று. இக்காரணத்தினாலேயே ராமமூர்த்திக்கு ஜெர்மனி போக முடியவில்லை. அவ்விடத்திலிருந்து அவனுக்கு அழைப்பு வந்திருந்தது. அமெரிக்கா, ஆஸ்திரேலியாவுக்கும் போக விரும்பினான். ராமமூர்த்தி | யூரோபின் பயில்வான்களை குஸ்திக்கு அறைகூவி அழைத்திருந்தான். ஒருவரும் முன்வரவில்லை. ராமமூர்த்திக்கு | முன்பே காமா பயில்வான், இமாம் பக்ஷ் என்ற பெயர்கொண்ட இரண்டு பாரதீய | பயில்வான்கள் இங்கிலண்ட் சென்று ஸ்டேன் ஸெலர்ஸ், ஜெபிஸ்கோ என்ற பெயருடைய பிரஸித்த பயில்வானை ஜெயித்திருந்தனர். | இதனால் ஹேகேன் ஸ்மித் என்ற பெயருள்ள பிரஸித்த யூரோப்ப பயில்வானும் இவர் முன்வரத் தைரியம் | கொள்ளவில்லை.

ராமமூர்த்தியின் ஜென்ம ஸ்தலம் தக்ஷிண பாரதத்தில் ஆந்த்ர தேசத்திலுள்ள வீரகட்டமென்ற | பெயருள்ள ஒரு கிராமமாம். அவன் தகப்பன் போலீஸ் இன்ஸ்பெக்டராக விருந்தான். ராமமூர்த்தி தன் |

ஆட்டங்களை முடித்து நிறுத்திவிட்டான். அவனது ஆசை, பாரதப்பூர அகாடா திறக்கப் | படவேண்டும்; பிள்ளைகளுக்கு மிகுந்த வீரமளிக்கும் பயிற்சி தரவேண்டும், என்பதாம். இதற்கென ஒரு | திட்டமும் தயார் செய்திருக்கிறான். இத்திட்டத்தை இந்தோர் ராஜ்யத்தில் பள்ளிகளில் பயில எடுத்துக்கொண்டுள்ளனர். | ராமமூர்த்தி வெறும் பலசாலிமட்டுமல்ல, மிகுந்த புத்திமானுங்கூட. அவன் 'என்ட்ரென்ஸ்' | வரை இங்க்லீஷ் படித்தான். ஸம்ஸ்க்ருதமும் அறிவான். ஹிந்தி பேசத்தெரியும். அவன் ப்ரஹ்மசர்யத்தின் | மேல் மிக்க பக்ஷபாதமுள்ளவன். நல்ல பருவத்தில் அவனது மார்பின் சுற்றளவு 48 | அங்குலமிருந்தது. மூச்சிழுத்தால் 56 அங்குலம் வரை விரிவடையும். அவன் | சிரித்த முகமுள்ளவன். சிரிப்பே தனது ஸ்வாஸ்த்யத்தின் காரணமென நினைத்திருந்தான் |. பவித்ரதையாக அவன் ப்ரஹ்மசாரி நியமத்தைக்கொண்டிருந்தான். மனம், வாக்குக் | காயத்தாலும் பவித்ரமாகவிருந்தான். எளிய ஆகாரம் உட்கொள்வான். ஸரள ஜீவனம். தினந்தோறும் | கஸரத் செய்வான். இவன் வார்த்தைகளால் இந்த உபதேசம் செய்கிறான் மேலும் இவன் உலகில் | சுகியாக இருக்க முக்கியமான உபாயமுமறிந்தவன். பாரதீய இளைஞர்களின் தற்போதைய | துர்பலதையைப் பார்த்து அவன் துக்கப்பட்டான். அவர்களை உத்தாரம் செய்வதற்கு மனங்கொண்டு | வருத்தத்தோடு சொல்வதாவது !—

பாரத இளைஞர்களின் உத்தாரமே என் ஜீவனத்தின் உத்தேசம். க்ருஷ்ணன் | லக்ஷ்மணன், பீமன், பீஷ்மன், ஹனுமான் இவர்களைப்போல் தேசத்தின்

இளைஞர்களைக்கொண்டு ஒரு | ஜயிக்கமுடியாத ஸேனையைக் கட்டுவதே என் இச்சையாக விருந்தது: இப்போதும் இருக்கிறது. | தேசத்தின் மூலைமுடுக்குகளுக்கும் ராமமூர்த்தி பறையறைந்து இளைஞர்களை எழுப்ப முயன்றான். மனம், வாக்கு, | காயம், பணத்தாலும் ராமமூர்த்தி பாரத சேவை செய்துள்ளான். பாரதத்தின் குழந்தைகளே, வாலிபர்களே ! | நீங்கள் இந்த ப்ரதிக்ஞை செய்யமாட்டீர்களா. எதுவெனின் 'இன்று முதல் நாம் | ஹ்ருஷ்ட, புஷ்ட, கஸரத்செய்து பலவான்களாகவும் ஸதாசாரவான்களுமாக முழுக்கவனமும் | செலுத்தி முயலுவோமாக' என்பதேயாம்.

# பாடம் 104

## சங்கேத லிபியில் எழுது

### சுத்த ஜலம்

நாம் தண்ணீரை எம்முறையில் சுத்தி செய்கிறோம்? மூன்று விதங்களில் நாம் தண்ணீரைச் | சுத்திசெய்ய முடியும், குடிக்கத் தக்கபடி ஆக்க முடியும்.

(1) தண்ணீரைக் காய்ச்சுவது | (2) பில்டர் செய்வதால் (கரி, மணல் ஸ்லம் கசியவைத்து வடிக்கட்டுவதால்) (3) ரஸாயன | சாஸ்த்ர முறைப்படி ப்ரயோகம் செய்வதால் சுத்தப்படுத்தலாம். தண்ணீரைக் காய்ச்சுவது ஏழையிலும் ஏழை | கூடச் செய்யக்கூடியதாக இருக்கிறது. ஆனால் வருத்தக்கூடிய விஷயமென்ன | வென்றால் இதனை யாரும் செய்யாததுதான். தண்ணீரிலுள்ள க்ருமிகள் மனுஷ்யனின் பரம சத்ருக்கள் |. தண்ணீரைக் கொதிக்கவைத்தால் அவற்றைத் தொலைக்க முடியும். இதனால் நூற்றுக்கணக்கான மனிதர்களின் | உயிரைக் காக்கமுடிந்திருக்கிறது. நீங்கள் காய்ச்சி ஆற்றின நீரையே குடியுங்கள் மேலும் இந்த | விஷயத்தை உங்கள் வீட்டிலும் சிநேகிதர்களிடையிலும் பரப்புங்கள். ஒரு பெரிய பட்டணத்தின் முனிஸிபாலிடி | அவ்வளவு நீரையும் காய்ச்சமுடியாது. ஏனெனில் இது செய்யமுடியாத காரியம். எல்லாத் | தண்ணீரையும் அவர்கள் காய்ச்சினால் எப்படியோ அப்படி நேர்ப்படுத்துவது விஞ்ஞான முறைப்படி | 'பில்டர்' செய்வதனாலாகும். என்னுடைய யோசனை இதுவாகும்.—தண்ணீரைக் காய்ச்சுவதனாலேயே அதைக் குடிக்கத்தக்கதாகச் | செய்யலாம்.

கங்கைத் தண்ணீரைத் தினமும் நிரப்பிக்கொள்கிறார்கள் அவர்கள் சாதாரணமாகச் சட்டியில், கூஜாவில் அல்லது சிறு பாண்டத்தில் நிரப்புகிறார்கள். அவர்களுக்கு இந்த உயர்ந்த எழுத்தை இங்க்லீஷிலிருந்து தர விரும்புகிறோம் :—

1. சட்டியைத் திறந்து வைக்காதேயுங்கள். ஏனெனில் தூசி, பூச்சிகள் விழ ஏதுவாகும் மேலும் நாயோ, பூனையோ அதிலிருந்து தண்ணீரைக் குடிக்கலாம்.

2. அழுக்கடைந்த பேலா அல்லது லோட்டாவை அதில் தோய்க்கலாகாது.

3. தண்ணீர்சேமித்துவைக்குமிடத்தில் அழுக்குச் சேரவிடாதே.

நம் நாட்டில் உள்ள எண்ணம், எந்த வஸ்துவும் தண்ணீரின் ஸ்பர்சத்தாலேயே சுத்தியாகிவிடுமென்பது. அவர்கள் இதனை நினைவிலிடவேண்டும். அதாவது: தண்ணீர் தானே அழுக்கடையும், அபாயந் தருவதாகவும் ஆகிவிடும். எப்போது ரோக க்ரஸ்தனொருவன் அதில் ஸ்னானம் செய்வதோ, துணியைத் துவைப்பதோ செய்கின்றானோ, ஜலம் நன்றாகக் காணப்படினும் அது ஆரோக்யத்தைப் பாதிப்பதாகும். ரோகத்தை உற்பத்திசெய்யும் க்ருமிகள் அதிலிருந்தாலும் அவை மிகச் சிறியவையாதலால் தண்ணீர் தெளிவாகவே தோன்றும், அவை தெரியமாட்டா. க்ருமிகளின் விஷயமாக ஒரு இங்க்லீஷ் பத்திரிகையில் இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது. "ஒரு தேக்கரண்டியளவு தண்ணீரிலுள்ள க்ருமி உலகிலனைவரையும்

பாதிக்கத்தக்கவையாம். அவைகளை தினம் இருபத்து நான்கு மணிகளிலும் ஒவ்வொரு ஸெகெண்டுக்கும் ஒவ்வொன்றாக கணக்கெடுத்தால் 20000 வருஷத்தில் எண்ணப்படலாகும்.

சைனா தேசத்தினர் தண்ணீரைப்பற்றி மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்கிறார்களெனச் சொல்வர். ‘அவர்கள் சொல்வதாவது: சரியாகக் காய்ச்சப்படாத நீர் அஸ்வஸ்ததையை யுண்டுபண்ணும்.’ அவர்கள் பச்சைத் தண்ணீருக்கு மிகவும் பயப்படுகின்றனர். தண்ணீரை துணிகொண்டு வடிகட்டினாலும் க்ருமிகள் அதன் வழியே தண்ணீருடன் கலந்து செல்லும். துணி எவ்வளவு நெருக்கமாக நெய்யப்பட்டிருந்தாலும் அதற்குள் செல்லுமளவு சூக்ஷ்மமானவை க்ருமிகள். சாப்பிடத்தகுந்ததாக ஜலத்தை ஆக்கிக்கொள்ள வேண்டுமெனின் அதனை நன்கு காய்ச்சிக்கொள்ள வேண்டும்.

க்ரீஷ்மருதுவில் சூடான தண்ணீரையே குடிக்க வேண்டியது மிக அவசியமாகும். சாப்பிடும்பொழுதுங் கூடக் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீர் குடிக்கவேண்டி வந்தால் இப்படிக் காய்ச்சிய தண்ணீரையே உபயோகிக்கவேண்டும். ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சமாக வெவ்வேறு சமயத்தில் தண்ணீர் சாப்பிட வேண்டும். மேலும் ஆரோக்யத்துடனிருக்க விரும்புவோர் இரவில் படுக்கப்போகுமுன்பும், காலையில் எழுந்தவுடனும் ஒவ்வொரு ‘க்ளாஸ்’ தண்ணீர் சாப்பிடுவதை வழக்கத்தில் கொண்டுவரவேண்டும்.

குடிக்கத்தக்கவைகளில் சுத்த ஜலமே மிகச் சிறந்ததாகும். எவராவது டீ, காபி குடிப்பதை வழக்கமாகக்

கொண்டிருந்தால் சரியானபடி | (இலை, ட) கொண்டு சுமாராக சரியான கஷாயம் இறக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அவைகளை அதிக சூடாக இருக்கும்பொழுது | குடிக்கக்கூடாது. மிகச் சூடான பானீயங்கள் வயிற்றில் புண்ணை உண்டாக்கிவிடும். கடைகளில் | விற்கப்படும் செயற்கைப் பானங்கள் (சோடா, லெமனேட் போன்றவை) குடிக்க யோக்யமல்லாதவை. அவற்றில் | அழுக்குத் தண்ணீர் சேர்க்கப்பட்டு சுத்தமல்லாத முறையில் தயார் செய்யப்படுகின்றன. | அழுக்குத் தண்ணீரால் ஆக்கப்படும் ஐஸும் (பனிக்கட்டியும்) நல்லதன்று. இதனைக் | குடிக்கும் பானங்களோடு கலந்து அவைகளைக் குளிர்ச்சி செய்வதைவிட அவைகளைக்கொண்ட பாத்திரத்தைச் | சுற்றிலும் வைத்துக் குளிர்ச்சி செய்துகொள்ளலாம். ஐஸ் க்ரீம், மலிவான ஷர்பத் இவைகளையும் உபயோகிப்பது | கூடாது. இவை மிக அபாயகரமானவை. இவற்றை உபயோகித்து ஜனங்கள் காலரா, சீதபேதி | முதலிய வியாதிகளை அடைகிறார்கள். இதனோடு சாராயத்தைப்பற்றியும் (ஆல்கொஹால்) சொல்ல விரும்புகிறேன். அது | ஒரு விஷம். ஆரோக்யமுடைய எந்த மனிதனுக்கும் மருந்தென்பது தேவையே இல்லை. | இது உண்மையில் ஆரோக்யத்தை அழிக்கும். மேலும் பழக்கக்குடி புத்தியையும் நஷ்டமாக்கிவிடும்.

ஹனுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம்.

# பாடம் 60

## KEY

நீங்கள் படியுங்கள்.

அவனிடம் பத்தணு பண மிருக்கிறது.

அவன் நேற்று சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

ராமன் அவனுக்கு மூன்று முட்களைத் தந்தான்.

கங்கைக் கரையில் எந்த மலையுமில்லை.

நான் அங்கு பூரியும் சாதமும் சாப்பிட்டேன்.

ஹரி இன்று சிவப்புக் குல்லாயை வாங்கினான்.

மாமரத்திலுள்ள பசுங்காய்கள் பழுக்காதவை.

அவன் கடிகாரத்தின் பெரியமுள் நேற்று முறிந்தது.

மா, கிச்சிலி முதலான பழங்கள் தித்திப்பாயிருக்கும்.

மே எட்டாந் தேதி டெல்லி ஹோம் மந்திரி சென்னை சென்றார்.

நான் இன்னும் எட்டு நாட்களுக்குப்பிறகு காசிக்குப் போக வேண்டுமா?

கீழ்த் திசையில் ருஷியா, சீனு வென்ற இரு தேசங்களிருக்கின்றன.

ராமனும் சீதையும் லங்கையிலிருந்து திரும்பியபோது மிகச் சந்தோஷமா யிருந்தனர்.

அத்ருஷ்டமின்றி அலைவோன் போதை வஸ்துவை யருந்தி அலைபவனைப்போல் நிஷ்ப்ரயோஜகனுவான்.

# பாடம் 72

## KEY

ஹிமாலயத்தில் எப்போதும் பனி மூடிக் கொண்டிருக்கும்.

மதுரா பட்டணம் யமுனைக் கரையி லிருக்கிறது.

குழந்தைகள் காலத்துக்குச் சரியாக பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

விஷய வாசனையில் மனம் செலுத்தாமையே சமர்த்து.

அவன் முந்தாநாள் தன் பாடத்தைப் படித்திருக்க வில்லை,

பம்பாயில் வீடுகள் ஏழு கட்டளவு உயர மிருக்கின்றன.

மனிதன் புகழ் பூ மணம் போல் பரவுகிறது.

மொகலாயர் கேபர் மூலம் இந்தியாவை ஆக்கிரமித்தார்கள்.

ரமேசனுக்கு மாதம் நாற்பது ரூபாயும் சாப்பாடும் கிடைக்கிறது.

நமது நாகரி எழுத்து உலகில் எழுத்துக்களில் அழகானது.

ஒரு புத்தியுள்ள குள்ளநரி பனிரெண்டு நரிகளை ஏமாற்றியது.

வட இந்தியாவின் பல நதிகள் வங்காள குடாக் கடலில் கலக்கின்றன.

முப்பத்து நான்கு பேர் போலீசார் கல்யாண ஊர்வலத்தோடு சென்றனர்.

போலீசார் ஐம்பது கைதிகளின் மேல் பிராது கொடுத்தனர்.

ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்கள் மழை கால மாதங்கள்.

# பாடம் 74

## KEY

இதைக் காட்டிலும் சுலப வழிகள் அகப்படா.

சிலோன் இந்தியாவின் தெற்கே ஒரு தீபம்.

அவர் மாலையில் பல ரோஜாப் பூக்களிருந்தன.

அவனிடம் ஹிந்தியில் நல்ல புத்தகங்களிருக்கின்றன.

நான் முந்தாநாள் சுகந்தரும் கனவு கண்டேன்.

ஒவ்வொருவனும் தனது சக்தியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

நம் பட்டணத்தருகே நெல் வயல்கள் பல இருக்கின்றன.

நான் ஏரிக்கரைமேலுள்ள தோட்டத்துக்குத் திரும்பினேன்.

பாரத ராஜதூதர் இங்கிலாந்து பிரதமரைக் காணுவார்.

அவர் ப்ரயாகையில் ஒரு சாரதா கோயிலை கட்டுவிக்கும் யோசனையிலிருக்கிறார்.

அச்சிறுவனின் விளையாட்டுச் சாமான்கள் எவ்வளவு அழகாக விருக்கின்றன!

யுத்தகாலத்தில் இந்தியாவிலிருந்து நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் ஐரோப்பா சென்றனர்.

அவர் வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் பெரிய மலையிருக்கிறது.

நீ அவனுக்கு ஒரு ரூபாய் கடன் தராதே என நான் ஆலோசனை கூறுகிறேன்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு மாதந்தோறும் நூற்றுக் கணக்கான கப்பல்கள் வருகின்றன.

# பாடம் 76

## KEY

அவன் வண்டிக்கூடு முழுமையும் பிய்ந்துபோயிருந்தது.

வட இந்தியர் வெண்மையாக லிருக்கின்றனர்.

தட்டான் நம் நகைகளை உரைத்துப் பார்த்தான்.

சக்தியுள்ளோர் நீதிமான்களானுல் மிக உபகாரம் செய்யலாம்.

அவன் தன் காலத்தில் நல்ல யோக்கியதையைக் காட்டினுன்.

பாபருக்குப்பின் ஹுமாயூன் இந்தியசக்ரவர்த்தியானுன்.

நான் ககோளம், பூகோளம், பார்ஸி இவற்றைக் கற்றேன்.

ஜுலை மாதத்தில் நம் பரீக்ஷையின் முடிவு வெளிப்படும்.

மாண்பு படைத்தோரே வாழ்க்கையின் முக்கிய குறியை அறியமாட்டுவர்.

ஒரு கொள்ளைக்காரன் அவன் வீட்டு ஜன்னலைப் பெயர்த்தான்.

எமக்கு சாலை சம்பந்தம் பரீக்ஷைக் குழுவோடு ஆகி விட்டது.

ராமனுக்கு மிதிலை அரசரின் பெண்ணுடன் கலியாண மாயிற்று.

என் மேஜையறையில் பென்சில், கடிதம், பேனு, மை இவை யிருக்கின்றன.

நமது நகரில் பலர் தானியம் விற்போரும் நூல், துணி விற்போரும் இருக்கினறனர்.

# பாடம் 82

## KEY

வீரன் சாமர்த்தியத்தால் ரணகளத்தில் பலனடைகிறான்.

அதிகாரிகள் சிப்பாய்களின் உற்சாகத்தை அதிகமாக்கினர்.

இந்திய ஆலைகளில் அதிகம் துணி தயாராகின்றது.

ஷாஜஹான் பலஅழகிய கட்டடங்களைக் கட்டுவித்தான்.

ஈசன் நிரஞ்சனனும், நிராகாரியும் தீனபந்துவுமாவன்.

அவர்கள் காரியாலயத்தில் பல புருக்களைப் பார்த்தனர்.

அவர் காசியில் சம்ஸ்க்ருத கலாசாலையை ஸ்தாபித்தார்.

ஜெர்மனி ஜனரலின் ஆக்கிரமிப்பு மிக பயங்கரமாயிருந்தது.

இந்திய அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்தின் ப்ரஸ்தாபத்தை ஆலோசிக்கும்;

லைஸென்ஸ் இல்லாமல் கைத்துப்பாக்கி, துப்பாக்கிகளை வைத்துக்கொள்ளக்கூடாது.

கோபம் முன்வாசலில் புகுந்தால் புத்தி பின்வாசலில் போய்விடும்.

மனிதன் நல்ல புத்தி, ஸத்யம், நிர்மலபாவனைகளால் கடவுளைக் காண்கின்றான்.

சமாசாரம் கிட்டியதும் ஆங்கில அரசாங்கம் அமெரிக்கத் தலைவருக்கு ப்ரார்த்தனைக்கடிதம் அனுப்பும்.

அதிகாலையில் சூரியன் தன் பொன்வண்ணக் கதிர்களை வீசினான்.

இம்மாதிரி சுபசமயம் அடிக்கடி வாழ்க்கையில் அகப்படாது.

நான் நவம்பர், டிஸெம்பர், பெப்ருவரி மாதங்களில் பள்ளிக்கூடம் போறேன்.

இந்தத் தனி ரயில் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு பனாரஸ், கான்பூர் மார்க்கமாக காச்மீரம் செல்கிறது.

# பாடம் 84

## KEY

அபிமானி தன் வ்யாபாரத்தில் பூரப் பயன்பெற மாட்டான்.

குருகுலமாணவர்கள் ஸைகலின்மேல் யாத்திரை செய்வர்.

அதிகார ப்ரதிநிதிகள் நாளை மறுநாள் புறப்படுவர்.

அவர் மகாராணாவுக்கு உதவியளிக்கக் குழுவை வேண்டிக்கொண்டார்.

சர்தூல்சிங் தனது சாமர்த்தியத்தால் எதிரியை ஓட்டினான்

அப்காரிப் பிரிவினை ஜமாதார் அபராதிகளை சிறையிலடைத்தான்.

இன்று நியாயாலயத்தில் ரகளைசெய்யும் கூலிகள்பேரில் பிரியாது கொடுப்பர்.

தசரதன் ஆணைப்படி ராமலக்ஷ்மணர்கள் வனவாசம் சென்றனர்.

பண்டிதர் ப்ரின்ஸிபாலின் சொல்லை ஒப்பினார்.

அரசாங்கத்தினரால் நியமிக்கப்பட்ட கமிஷனர் தமது ரிபோர்டை வெளியிட்டார்.

மஹாகவி கான்கானா அப்துல் ரஹீம் ஹிந்தி இலக்கியத்துக்கும் பெரிய உபகாரம் செய்திருக்கிறார்.

போஜ மஹாராஜன் தர்ப்பாரின் மஹாகவி காளிதாஸன் விசேஷமாக கௌரவிக்கப் பெற்றான்,

டாணாக்காரன் தன் புத்தி சாதுர்யத்தால் திருடிய ச்ருங்காரத்தைச் சரிப்படுத்தினான்.

வரவேற்புக் குழுத்தலைவர் அவர்கள் நிலைக்க உயர்ந்த ஏற்பாடு செய்தார்.

மஹாத்மா சுகநாசனின் உபதேசங்கள் மராட்டனின் விசாரத்தில் புரட்சியை எழுப்பின.

THE
HANUMAN
PRINTING WORKS
VILLUPURAM